**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**

இ.ஏ.56/2017

இன்

**இ.பி.எண். 33/2017**

**நாள் :14.07.2023**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மசா.1 சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : மசா.1. திரு.சிட்டிபாபு (எ) தேவராஜலு

வயது :

த/பெ :

தொழில் :

மதம் :

விலாசம் :

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தான் மேற்படி இடைக்கால மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் நிறைவேற்று மனுவை தடைசெய்ய சொல்லி கேட்டுள்ளேன். அசல் வழக்கு எண்.1/2002 பாகபிரிவினை கேட்டு தாக்கல் செய்த வழக்கில் நான் வழக்கறிஞரை வைத்து வாதாடினேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பு என்ன ஆயிற்று என்றால் எனக்கு எதிராக முடிந்தது. அந்த வழக்கில் பாகபிரிவினை 2/3 என்று பாகம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தனர் என்றால் சரிதான். அந்த முதல் நிலை தீர்ப்பாணை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் எனக்கு எதிராக தீர்ப்பானது. அந்த மேல்முறையீட்டு தீர்ப்புக்கு எதிராக 2வது மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த 2வது மேல்முறையீடு என்ன ஆயிற்று என்றால் அதுவும் எனக்கு எதிராக தீர்ப்பானது. அதன்பிறகு இந்த மனுவில் உள்ள எதிர்மனுதாரர்கள் இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தீர்ப்பாணையில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். இறுதிநிலை தீரப்பாணை மீது மேல்முறையீடு செய்தேனா

என்றால் தாக்கல் செய்தேன். அந்த மேல்முறையீடு என்ன ஆயிற்று என்றால் எனக்கு எதிராக தீர்ப்பானது. அந்த மேல்முறையீடு தீர்ப்புக்கு எதிராக 2வது மேல் முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த 2வது மேல்முறையீடும் எனக்கு எதிராக தீர்ப்பானது. அதன்பிறகு மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன். நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும் போது என் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்து என் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனது பிரமாணவாக்குமூலத்தில் இந்திய வாரிசு உரிமை சட்டம் 6 மற்றும் 8ன் படி நிலைக்கதக்கதல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதே தான் நான் தாக்கல் செய்த இடைக்கால மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்திய வாரிசு உரிமைச்சட்டத்தை பற்றி எந்த நீதிமன்றத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்தியவாரிசு உரிமை சட்டம் பிரிவு 6 மற்றும் 8 குறித்து இதே நீதிமன்றத்தில் நிறைவேற்று மனுவில் இடைக்கால மனு எண்.165/2021 என்கிற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவின் மீது விசாரணை நடந்தது என்றால் சரிதான். அந்த மனு என்ன ஆயிற்று என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி**
**பொன்னேரி.**